

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) சென்னை, கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள அனைத்து விதமான பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் உயர்தர மத்திய ஆய்வகத்தை பார்வையிட்டபோது, மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் பார்த்தசாரதி, ஆய்வகத்தில் இன்றையதினம் இதுவரை 2390 பல்வேறு வகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். ஆய்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார் உடனிருந்தார்.

# கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

**சென்னை, ஆக.10–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2025) செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்துகொண்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள தாம்பரம் – மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக் கட்டடத்தை திறந்து வைத்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.**

’பிறகு, விழா முடிவுற்று இல்லம் செல்லும் வழியில், முதலமைச்சர் அவர்கள், சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மருத்துவமனையில் உள்ள அவரச சிகிச்சைப் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டு, இரத்த பரிசோதனை, சளி பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை, சதை பரிசோதனை உள்ளிட்ட அனைத்து விதமான பரிசோதனைகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்ளும் உயர்தர மத்திய ஆய்வகத்தையும் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, மருத்துவமனை இயக்குநர் அவர்கள், சிகிச்சை பெற்றுவரும் 121 புற மருத்துவ பயனாளிகள் (OUT PATIENTS), 326 உள் மருத்துவ பயனாளிகளுக்கு (IN PATIENTS), மத்திய ஆய்வகத்தில் இன்றையதினம் இதுவரை 2390 பல்வேறு வகை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அம்மருத்துவமனையில் கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த மருத்துவ பயனாளியிடம் அளிக்கப்பட்டுவரும் சிகிச்சை விவரங்கள் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். அப்போது, அவர் மருத்துவமனையில் சிகிச்சை நல்ல முறையில் அளிப்பதாகவும், நன்றாக கவனித்துகொள்வதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

பின்னர், பணியாளர்களின் வருகைப் பதிவேடு, உள் மற்றும் புற மருத்துவ பயனாளிகளின் சிகிச்சை விவர பதிவேடுகள், மருந்துகள் இருப்பு பதிவேடு போன்றவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, அதன் விவரங்கள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

அத்துடன், மருத்துவமனையை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும் என்றும், இம் மருத்துவமனையில் மருத்துவ பயனாளிகளுக்கு தேவையான சிகிச்சைகளை காலதாமதமின்றி வழங்கிட வேண்டும் என்றும், அத்தியாவசிய மருந்துகள் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் பார்த்தசாரதி மற்றும் மருத்துவர் ரமேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# மீனவர்கள் - படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய அமைச்சருக்கு கடிதம்!

**சென்னை, ஆக.10–**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை யும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப் பதற்கு வலுவான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள், நேற்று (09.08.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உறுதியான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவலியுறுத்தி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (09.08.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் இலங்கை கடற்படையினரால் நேற்று (9.8.2025) இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு இந்திய மீனவர்கள் அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுடன் சிறைபிடிக்கப்பட்ட மற்றொரு துயரமான சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கு கடலை நம்பியே உயிர் வாழ்ந்து வரும் நிலையில் தற்போது சிறை வாசத்தின் அச்சத்திலேயே வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மீனவர்கள் நீண்டகாலமாக சிறையில் வைக்கப்படுவதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு, அவர்களின் குடும்பங்களுக்கு கடுமையான மன உளைச்சலையும் நிதி நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த விஷயத்தை திறம்படக் கையாண்டு, கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட இந்திய அரசு உறுதியான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் –மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!

*திருப்பூர், ஆக.10-*

*திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் - அமைச்சர் மு.பெ. சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*





*முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழும் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும், நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் தளபதி அவர்கள் 11.08.2025 திங்கட்கிழமை அன்று உடுமலைப் பேட்டை, நேதாஜி மைதானத்தில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் ரூ.949 கோடியே 53 இலட்சத்தில் 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைக்கவும், ரூ.182 கோடியே 06 இலட்சத்தில், 35 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், ரூ.295 கோடியே 29 இலட்சத்தில் 19,785 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், உடுமலைப்பேட்டை நகர தி.மு.கழகத்தின் அலுவலக புதிய கட்டடத்தை திறந்து வைக்கவும்,*

*கொங்கு மண்டலத்தில் சுமார் 4 இலட்சம் ஏக்கர் பயன் பெறும், பி.ஏ.பி பாசன திட்டம் அமைய காரணமானவர்களான பெருந்தலைவர் கு.காமராஜர், சி.சுப்பிரமணியம். வி.கே.பழனிச்சாமி கவுண்டர், பொள்ளாச்சி திரு நா.மகாலிங்கம் ஆகியோருக்கு பொள்ளாச்சியில் முழு திருவுருவச்சிலைகளை திறந்து வைக்கவும், பிஏபி திட்டப்பணி நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்த தொழிலாளர்களுக்கு ஆழியாரில் அமைந்துள்ள நினைவரங்கம் திறந்த வைக்கும் வருகை தர உள்ளார்.*

*அதுசமயம் இந்நிகழ்ச்சிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒருங்கிணைந்த மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், , ஒன்றிய, நகர, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், பி.ஏ.பி. பாசன விவசாயிகளும், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று நிகழ்ச்சிகளை சிறப்பித்து தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*

# ‘நலன் காக்கும் ஸ்டாலின்’ திட்டம்!

# நேற்றைய முகாமில் 48,418 பேர் பயன்பெற்றனர்!

சென்னை, ஆக. 10–

முதல்வர் அவர்களால் கடந்த வாரம் தொடங்கப்பட்ட “நலம் காக்கும் ஸ்டாலின்” எனும் சீரிய சிறப்புமிகு திட்டம் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை 1256 இடங்களில் நடைபெற உள்ளது. அதன்படி நேற்று தமிழ்நாட்டில் 36 இடங்களில் மிகச்சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. அதன் மூலம் தற்போது இறுதியாக முடிவுற்று பயன்பெற்ற ‘மருத்துவப்பயனாளர்களின் ’எண்ணிக்கை 48418 என்பதை அறிவிக்க மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

| District | Total Registrations |
|---|---|
| Ariyalur | 1573 |
| Chengalpattu | 1006 |
| Coimbatore | 1538 |
| Cuddalore | 870 |
| Dharmapuri | 1176 |
| Dindigul | 1474 |
| Erode | 1454 |
| Kallakurichi | 1419 |
| Kancheepuram | 1033 |
| Kanniyakumari | 1453 |
| Karur | 1112 |
| Krishnagiri | 1292 |
| Madurai | 1191 |

| District | Total Registrations |
|---|---|
| Mayiladuthurai | 1363 |
| Nagapattinam | 1079 |
| Namakkal | 1396 |
| Perambalur | 890 |
| Pudukkottai | 1434 |
| Ramanathapuram | 1237 |
| Ranipet | 1187 |
| Salem | 1436 |
| Sivaganga | 1341 |
| Tenkasi | 1000 |
| Thanjavur | 1431 |
| Theni | 1092 |
| Thiruvallur | 1949 |

| District | Total Registrations |
|---|---|
| Thiruvarur | 968 |
| Thoothukkudi | 1542 |
| Tiruchirappalli | 1197 |
| Tirunelveli | 2407 |
| Tirupathur | 1448 |
| Tiruppur | 1288 |
| Tiruvannamalai | 2191 |
| Vellore | 1328 |
| Viluppuram | 1535 |
| Virudhunagar | 1088 |
| **Grand Total** | **48418** |

இவ்வாறு அரசின் செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## முதல்வருக்கு நன்றி பாராட்டு!

# தகைசால் தமிழர் விருது பெறும் கே.எம்.காதர் மொகிதீனுக்கு பாராட்டு விழா!

## கட்சித் தலைவர்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை ஆக:10

தமிழ்நாடு அரசின் தகைசால் தமிழர் விருது பெறும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கு பாராட்டு விழா, அவ்விருதை வழங்கிய திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி பாராட்டு விழா, மற்றும் சமுதாய சேவகன் ஒளி வீசும் காவலன் ஆவணப்படம் வெளியிட்டு விழா அடங்கிய முப்பெரும் விழா 15.8.2025 வெள்ளிக்கிழமை மாலை 4:30 மணி அளவில் எழும்பூர் பைஸ் மஹாலில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தமிழ்நாடு பொதுப்பணி நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப் பெருந்தகை,ம. தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் டி.கே. ரங்கராஜன், தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் ஆணைய துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ்,சி. மதிமாறன், கேரள மாநிலம் பாலக்காடு செய்யிது சாதிக்அலி சிஹாப் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் ஏற்புரையாற்றுகிறார்.

முன்னதாக சமுதாய சேவகன் ஒளி வீசும் காவலன் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் சாகிப் ஆவணப்படம் வெளியிடப்படுகிறது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.08.2025) செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளியில், ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டம் முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன். தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ப்ரியா, இணை இயக்குநர் மரு.செந்தில்குமார். மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பானுமதி மற்றும் மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.





ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட 163–வது வார்டு ஆதம்பாக்கத்தில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இதில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், வட்டச் செயலாளர்கள் கே.ஆர்.ஜெகதீஸ்வரன், வேலவன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.